# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2391/30 - 2024 ජූලි මස 05 වැනි සිකුරාදා - 2024.07.05
*2391/30 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தங்காலை பிரதேச சபை**

*களியாட்ட வரி*

***1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 1(2) ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட அறிவித்தல்***

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத்தின் கீழான களியாட்ட வரி திருத்தச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவது களியாட்ட நடவடிக்கைகளுக்கு உட்பிரவேசிப்பதற்காக செய்யப்படுகின்ற மொத்தப் பிரவேசப் பத்திரங்களின் பெறுமதியில் நூற்றுக்கு 10% இற்குச் சமமாக பணத்தை களியாட்ட வரியாக விதித்து அறவிடப்பட வேண்டுமெனவும், 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தின் கீழான களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவில் குறித்த ஒழுங்குவிதிகளின்படி தங்காலை பிரதேச சபையினால் 2023.06.19 ஆந் திகதி நிதி மற்றும் கொள்கைகள் செயற்குழுவின் தீர்மான இலக்கம் 01-07 இன்கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தினை தென் மாகாண கௌரவ ஆளுநர் விலியம் விஜேசிங்க கமகே ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணைவிதிக்கு) ஏற்ப எனக்கு கிடைத்த அதிகாரத்தின் பிரகாரம் அனுமதிக்கப்பட்டதாக இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

**விலியம் விஜேசிங்க கமகே,**
தென் மாகாண ஆளுநர்.

*ஆளுநர் செயலகம்,*
*காலி,*
*2023, திசெம்பர் 06.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**மேற்கூறப்பட்ட தீர்மானம்**

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத்தின் கீழான களியாட்ட வரி திருத்தச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் உப பிரிவின்படி கிடைத்த அதிகாரத்தின் பிரகாரம் தங்காலை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவது களியாட்ட நடவடிக்கைகளுக்கு உட்பிரவேசிப்பதற்காக செய்யப்படுகின்ற மொத்தப் பிரவேசப் பத்திரங்களின் பெறுமதியில் நூற்றுக்கு 10% இற்குச் சமமாக பணத்தை களியாட்ட வரியாக விதித்து அறவிடப்பட வேண்டும் எனும் கருத்தை 2023.09.01 ஆந் திகதி தொடக்கம் செயற்படுத்தப்படவென கருத்துத் தெரிவிக்கின்றேன். அவ்வாறு மேலே விதிக்கப்பட்ட களியாட்ட வரியினை குறித்த களியாட்ட நடவடிக்கை நடத்தப்படும் திகதிக்கு முன் தினம் குறித்த அமைப்பால் அல்லது அமைப்பாளர்களினால் முறையாக தங்காலை பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டுமென்றும், தங்காலை பிரதேச சபையின் செயலாளராகிய எனக்கு கிடைத்த 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபையின் 9(3) ஆம் பிரிவின் பிரகாரம் நான் தீர்மானித்துள்ளேன்.*

EOG 07-0039

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.